# பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது

**(மத்தேயு 10: 5-15)**

1. இயேசு தன்னை பின்பற்றுகிறவர்களில் பன்னிரண்டு பேர்களை தன்னுடைய விசேஷ பிரதிநிதிகளாக அனுப்புவதற்காக நியமித்தார். இவர்கள்தான் அவருடைய அப்போஸ்தலர்கள். அவர் அவர்களை யூதேயா முழுவதும் அனுப்பினார். அப்போதைய நிலையில் அவர்கள், ஜெநிப்பிக்கும் பரிசுத்த ஆவியை பெறாதிருந்தார்கள். அதை அவர்கள் பரத்திலிருந்து பெந்தகொஸ்தே நாள் வரை பெறவில்லை. ஜெநிப்பிக்கும் பரிசுத்த ஆவி இன்னமும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை: ஏனென்றால், இயேசு கிறிஸ்து இன்னமும் மகிமைப் படவில்லை (யோவா 7:39).

2. ஆனால் ஞானஸ்நானத்தின்போது இயேசு கிறிஸ்துவுக்கு பரிசுத்தாவி அளவில்லாமல் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் இந்த அவருடைய 12 அப்போஸ்தர்களுக்கு பரிசுத்த ஆவியின் பயனால், அவர்கள் வியாதியஸ்தரை குணமாக்கவும் பிசாசுகளைத் துரத்தவும் தக்கதாக, தன்னுடைய சொந்த விசேஷ அதிகாரங்களில் சிலவற்றை அளித்தார். ஆனால், அவர்களுடைய விசேஷ வேலை, இயேசுவுடையதைப் போல, சரீர சம்பந்தமான நோய்களை குணப்படுத்துவது மாத்திரம் அல்ல, அது முக்கியமான வேலையயுமல்ல. கர்த்தராகிய இயேசுவை ராஜாவாகவும், நெடுநாட்கள் எதிர்பார்த்திருந்த மேசியாவாகவும் அறிவிப்பதும், தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று ஜனங்களுக்குச் சொல்லுவதுமே அவர்கள் செய்ய வேண்டிய முக்கிய வேலையாயிருந்தது.

3. இந்த தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்த செய்தி எல்லா யூதர்களுடைய எதிர்பார்த்தலுக்கும் இணக்கமாக இருந்திருக்க வேண்டும். தங்கள் மூலமாக பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தது (ஆதி 12:3; 22:18) நிறைவேற பல நூற்றாண்டுகளாக அவர்கள் காத்துக் கொண்டிருந்தனர். "பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்: 3:2) என்ற அறிவிப்புக்கு ஜனங்களுடைய கவனத்தை இழுக்கவே, இயேசுவும் அப்போஸ்தலரும் அற்புதங்களை செய்தனர். அந்த ராஜ்யத்தைப்பற்றி தெரிவிப்பதே அவர்களது ஊழியத்தின் முக்கிய வேலையாயிருந்தது.

4. யோவான் ஸ்நானனுடைய செய்திக்கு ஒத்திருந்த இந்தச்செய்தி, "உத்தம இஸ்ரவேலர்" எல்லாருடைய விழிப்புணர்ச்சியையும் எழுப்பும் என்றும், அவர்களுடைய கவனத்தை ராஜாவாகிய இயேசுவின் அண்டைக்கு இழுக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. தங்களுடைய செய்தி அப்பொழுது புற ஜாதியாருக்கு அல்ல என்றும், அவர்களுடைய அண்டையில் வசிக்கும் கலப்பு ஜனங்களாகிய சமாரியருக்கும் அல்ல என்றும் அவர்கள் முக்கியமாக எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். உண்மையான யூதர்கள் மாத்திரமே, ராஜ்யத்திலும் அதன் மகிமையிலும் அப்பொழுது பங்குகொள்ள தக்கதாகத் தங்களுடைய இருதயத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்த, அப்பொழுது அழைக்கப்பட்டார்கள். "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" மாத்திரமே அவர்களுடைய செய்தி சொல்லப்பட வேண்டியதாயிருந்தது (மத்: 10: 5, 6).

5. பிரயாணத்திற்குத் தேவையான பொருள்களையோ அல்லது அதிகப்படியான வஸ்திரங்களுக்காக பணத்தையோ அவர்கள் எடுத்துச் செல்லக்கூடாது (வச: 9, 10). தங்களை அனுப்பின எஜமானிடத்தில் பூரணமாகச் சார்ந்திருக்க வேண்டும் என்ற பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர். வீடு வீடாகச்சென்று யாசிக்கும் பிச்சைக்காரராய் அவர்கள் இருக்கக்கூடாது. அதற்கு மாறாக, தேவனுக்காகவும் மேசியாவுக்காகவுமுள்ள தங்களுடைய ஊழியத்தின் கௌரவத்தைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பிரவேசிக்கும் போது அங்குள்ள மிகவும் தகுதியான, மிகவும் பரிசுத்தமுள்ள ஜனங்களைப்பற்றி விசாரித்தறிய வேண்டும் (வச. 11). ஏனென்றால், இப்படிப்பட்டவர்களே அவர்களுடைய செய்தியில் மிகவும் விசேஷ சிரத்தையுடையவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய செய்தியை பெற்றுக்கொள்ளும்போது உண்மையாகவே அந்த ராஜாவின் பிரதிநிதிகளாக அவர்களை உபசரிக்க சந்தோஷப் படுவார்கள். அடுத்த இடத்திற்கு செல்லும்வரை அவர்கள் தங்கியிருக்கிற ஒவ்வொரு இடத்திலும் விருந்தினரைப்போல அவர்கள் இருக்க வேண்டும்.

6. ஒரு வீட்டில் பிரவேசிக்கும்போது தாங்கள் வந்திருப்பதின் நோக்கத்தை வீட்டின் தலைவனுக்கு அறிவித்து அவனை கண்ணியத்துடன் வாழ்த்த வேண்டும். அவன் அவர்களை சமாதானத்துடனும் உள்ளன்புடனும் ஏற்றுக்கொண்டால், அவர்கள் கொடுத்த ஆசீர்வாதங்கள் அந்த வீட்டின் மேல் தங்கும். இல்லை என்றால், அவர்கள் தங்களுடைய சொந்த நம்பிக்கையையும் சமாதானத்தையும் இழந்து விடக்கூடாது. ஆனால், செய்தியை பெற்றுக்கொள்ளவும் தங்களையும் ஏற்றுக்கொள்ள தகுதியான வேறு ஒருவரைத் தேடி, அவ்விடம் விட்டு கடந்துச் செல்ல வேண்டும். அவர்களை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். அவர்களையும் அவர்களுடைய செய்தியையும் நிராகரிக்கிறவர்கள் ஒரு பெரிய சந்தர்ப்பத்தை இழந்து போவார்கள் (வச. 12-14, மத். 10: 40 உடன் ஒப்பிடவும்).

## சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்

7. சோதோமில் வசித்த ஜனங்கள் துன்மார்க்கத்தில் மிகவும் கெட்டிருந்தார்கள். இருந்தாலும், எஜமானுடைய மதிப்பின்படி, இந்த ஜனங்கள், சுவிசேஷத்தைக்கேட்டு அதை நிராகரிக்கிறவர்களைவிட துன்மார்க்கத்தில் குறைந்தவர்கள். (வச. 15). இந்த அடிப்படை உண்மை நம்முடைய நாட்களில் உள்ள அநேக ஜனங்களுக்கும் பட்டணங்களுக்கும், உதாரணமாக கப்பர்நகூமுக்கும் பொருந்தும். நியாயத்தீர்ப்பின் நாள் (நியாயத்தீர்ப்பு நாளைப்பற்றி அறிய விரும்புகிறவர்கள் நியாயத்தீர்ப்பு நாள் என்ற சிறிய இலவச புத்தகத்திற்காக எங்களுக்கு கேட்டு எழுதுங்கள்) என்று அழைக்கப்படுகிற வரப்போகிற யுகத்தில் நித்திய ஜீவனுக்காகவோ அல்லது நித்திய மரணத்துக்காகவோ உள்ள சோதனையில் முழு உலகமும் ஒரு சந்தர்ப்பத்தைப் பெறும்போது, மற்ற அநேகரைவிட, சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்.

8. கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் எந்த அளவிற்கு ஒருவன் வந்திருக்கிறானோ அந்த அளவிற்கு அவன் பொறுப்புள்ளவனாகிறான். ஆதாமிலிருந்து தோன்றிய ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் மரணம் இரட்சிப்புக்காகவுள்ள ஒரு பூரணமான சந்தர்ப்பத்திற்கு உத்தரவாதமளிக்கிறது, அதற்கு அதிகமாக அல்ல. புறமதஸ்தரில் பெரும்பாலானோர் ஒரு சந்தர்ப்பத்தையும் பெறாமலே அந்தகாரத்தில் மரித்திருக்கிறார்கள். கப்பர்நகூமில் வசித்த ஜனங்கள் செய்தது போல, கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள அநேகர் தங்களுடைய சந்தர்ப்பத்தை புறக்கணித்திருக்கிறார்கள். ஆதலால் அனைத்து மனுக்குலமும் கிறிஸ்துவிலுள்ள தங்களுடைய சிலாக்கியங்களைப் பற்றிய முழு அறிவுக்கு கொண்டு வரப்படும் (1 தீமோ: 2:4). பிறகு, யார், யார் அசட்டை செய்கிறார்களோ, அவர்கள் எல்லாரும் அழிக்கப்படுவார்கள் (அப். 3:23), அந்த தயவை மதித்து கீழ்ப்படிதலை நிரூபித்துக் காட்டுகிறவர்கள் வளர்ச்சி பெற்று முடிவில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

## ராஜ்யத்தின் சுவிசேஷம்

9. உண்மையாகவே பரலோக ராஜ்யம் அப்பொழுது வராதிருந்தபோதும், கர்த்தர் சொல்லிக்கொடுத்தபடி அவரைப் பின்பற்றுகிறவர்கள், "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று இன்னமும் ஜெபிக்கும்போதும், நம்முடைய கர்த்தரும் அப்போஸ்தலர்களும் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று அன்றே பகிரங்கமாகக் கூறினது ஏன் அவர்களுக்கு சரியாகக் காணப்பட்ட

தென்று அநேகர் மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். இதற்குரிய விளக்கத்தை அறிந்து கொண்டோமானால், இந்த அறிவு, இப்பொழுது சரியாக புரிந்து கொள்ளாமலிருக்கிற வேதாகமத்தின் அதிகமான பாகத்தை உயர்வாக மதிப்பதற்கு நமக்கு ஒரு சாவியைப்போல உதவும்.

10. இஸ்ரவேலர், தங்கள் மூலமாக (ஆதி 12:3, 22:8) தேவனுடைய ஆசீர்வாதம் பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும் கொடுக்கப்படுவதற்கு, அவர்கள் மிகவும் அதிகமாக உயர்த்தப்படுவார்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் தங்களில் நிறைவேற, பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக காத்துக் கொண்டிருந்தனர். நம்முடைய கர்த்தர் அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாயிருந்தால், யூதராஜ்யத்துக்குக் கொடுத்திருந்த எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேற தேவனுடைய வேளை வந்துவிட்டது என்று, அப்போஸ்தலர் மூலமாக அவர்களுக்கு விளம்பரப்படுத்தினார். அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாயிருப்பதற்கு அவர்கள் ஒரு பரிசுத்த ஜாதியாக இருக்க வேண்டும். அதற்காக அவர்களுக்குப் போதிக்கவும் அவர்களை ஆயத்தப்படுத்தவும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு, மோசேயின் மூலமாக நியாயப்பிரமாண உடன்படிக்கை அவர்களுக்குள் புகுத்தப்பட்டிருந்தது.

11. ஒரு ஜனமாக அவர்கள், அந்த காலத்தில் உலகில் வசித்த ஜனங்களில் மிகவும் தெய்வ நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். இருந்தபோதிலும், அவர்களில் வெகு சிலரே "உத்தம இஸ்ரவேலராய்" இருந்தார்கள். அதாவது, இருதயத்தில் முற்றிலுமாக தேவனுக்கு பிரதிஷ்டை செய்திருந்தார்கள். பரிசுத்தத்தின் மூல உபதேசங்களுக்கு இணக்கமாக ஜீவித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பலனாக, தேவனுடைய வேலைக்கு இஸ்ரவேல் ஜனங்களெல்லாரும் ஆயத்தமுள்ளவர்களாயிருப்பதற்குப் பதிலாக, அவர்களில் மீதியானவர்களாகிய சிறு வகுப்பார் மாத்திரமே தேவனுடைய ராஜ்ய அழைப்பின் செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். மற்றவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமுள்ளவர்களாயிருக்கத்தக்கதாக, அவர்கள் சீர்திருந்துவதற்கும், மனந்திரும்புவதற்கும், கற்பனைகளுக்கு இணக்கமாக ஜீவிக்கவும், இயேசுவுக்குச் சற்று முன்புதான் யோவான் ஸ்நானன் அவர்களுக்கு உபதேசித்தான்.

12. ராஜ்யத்தின் சிலாக்கியங்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு உரியது என்பதை தேவன் முன்னறிவித்திருந்தார். ஜாதியில் மீதியானவர்கள் மாத்திரம் ஆவிக்குரிய இஸ்ரவேலராக ஆக தகுதியுள்ளவர்களாகக் காணப்படுவார்கள் என்று அவர் தீர்க்கதரிசிகள் மூலமாக தெரிவித்தார். ஆதலால் நம்முடைய கர்த்தர் முழு இஸ்ரவேல் ராஜ்யத்தினிடமும் "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று சொன்னார். ஆகையால், தான் சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, நமது கர்த்தர் யூதர்களிடம், இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும். 'பாழாக்கி விடப்பட்டிருகிறது' என்பதே சரியான மொழியாக்கம். அதாவது அந்தச் க்ஷணமே பாழாக்கி விடப்பட்டாயிற்று – 'Your house is left unto you desolate'). கர்த்தருடைய நர்மத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக்காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மத்: 23: 38, 39)

13. மாம்ச பிரகாரமான இஸ்ரவேலருக்கு முதலாவதாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய ராஜ்யத்தின் சிலாக்கியங்கள் அல்லது சந்தர்ப்பங்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு (கிறிஸ்தவர்களுக்கு) மாற்றப்பட்டன. ஆவிக்குரிய இஸ்ரவேலரின் (கிறிஸ்தவ) சபை, பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பமானது. மாம்சபிரகாரமான இஸ்ரவேலரிலுள்ள எல்லா உத்தம இஸ்ரவேலரும் ஆவிக்குரிய வீட்டின் அங்கத்தினராவதற்கு சிலாக்கியம் பெற்றார்கள். அதாவது, பரிசுத்த ஆவியினால் புது சிருஷ்டியாக ஜெநிப்பிக்கப்பட்டு சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்க்கப்பட்டார்கள். இந்த சபையைக் குறித்துதான், "நீங்களோ தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார் (1 பேது 2:9).

14. ஆவிக்குரிய இஸ்ரவேலில் இடம்பெறத் தகுதிப்பெற்ற யூதர்கள் எத்தனை பேர் உண்டோ, அத்தனை பேரையும் தேர்ந்தெடுத்தபிறகு, மாம்ச பிரகாரமான இஸ்ரவேலர் தேவ தயவிலிருந்துத் தள்ளப்பட்டார்கள் (ரோம். 11: 25, 11, 12, 15). பூமியின் சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமுள்ள தேவனுக்கு உண்மையாயிருப்பதற்குரிய ஆவியையும் "உத்தம இஸ்ரவேலருக்குரிய" ஆவியையும் உடையவர்களைத் தேடி கண்டுபிடிக்க கர்த்தருடைய உண்மையுள்ள அங்கத்தினர் மூலமாக அழைப்பு சுவிசேஷ யுகத்தில் விடப்பட்டது. இப்படிப்பட்ட புறஜாதியார்கள் எல்லாரும் அதே ராஜ்யத்தின் அங்கங்களாக, யூதரோடு சேர்ந்து, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆவிக்குரிய இஸ்ரவேலரைச் (கிறிஸ்தவர்களைச்) சுற்றிலும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைக்கும் பலவிதமானவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஆகையால் லட்சணக்கணக்கான எண்ணிக்கையுள்ள பேர்ச்சபை அல்லது பெயரளவான சரீரம் அல்லது வெளிப்பகட்டான சபையும், அவர்கள் மத்தியில் சிதறிக் கிடக்கிற உண்மையான சரீரமான சபையும் உண்டு.

15. யூத யூகத்தின் கடைசியில், மாம்சபிரகாரமான இஸ்ரவேலரை பார்வையிடவும் அவர்களில் தகுதியுள்ள போதுமான ஜனங்கள் காணப்பட்டால், அவர்களை வைத்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் இயேசு முதல் வருகையில் வந்தார். அதுபோல, சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் ஆவிக்குரிய இஸ்ரவேலரிலுள்ள (கிறிஸ்தவர்களில்) பரிசுத்தமானவர்களை கண்டுபிடிக்க அவர்களிடம் வருதல் இரண்டாம் வருகையின் ஒரு அம்சமாகும். பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சுவிசேஷ யுகத்தின் முடிவு வரை, தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சபையாக அமைய போதுமான பரிசுத்தவான்கள் காணப்படுவார்கள் என்று வேதாகமம் நிச்சயமாகச் சொல்லுகிறது.

16. இந்த தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சபை, மத்தியஸ்த ராஜ்யத்தில் இயேசுவின் ராஜஸ்திரீயாகவும் உடன் சுதந்திரராகவும் இருக்க தேவன் திட்டமிட்டார். இந்த மத்தியஸ்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடன், அது உலகத்தாரை ஆசீர்வதிக்கும் வேலையை ஆரம்பிக்கும். தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யம் உயர்த்தப்பட்ட பிறகு, தேவனுடைய பூரண தயவு மாம்சபிரகாரமான இஸ்ரவேலருக்குத் திரும்பிப்போகும் என்று வேதாகமம் நிச்சயமாகச் சொல்லுகிறது. (ரோம் 11: 25-32). அப்பொழுது இருக்கும் காரியங்களின் புது முறைமைக்கடியில் ஆசீர்வதிக்கப்படுவதற்கு மாம்சபிரகாரமான இஸ்ரவேலரே முதல் ஜனங்களாயிருப்பார்கள். அந்த ஜனங்களில் யார் தேவனோடு இணக்கமாக இருக்கிறார்களோ அவர்கள் மூலமாக, சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதம் பரவும் (எரேமி. 31:31-34; ஏசா 2: 1-4).

17. யூத மக்கள் தங்களுடைய சுயதேசம் திரும்புவதையும், தேவனுடைய தயவுக்கு அவர்கள் திரும்புவதற்குரிய சான்றுகளையும் காணும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிற நாம் எவ்வளவு பாக்கியவான்களாயிருக்கிறாம்! அவைகளும் மற்ற காலங்களின் அடையாளங்களும், வேதாகம தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலிலுள்ள தேவராஜ்யத்தின் பூமிக்குரிய அம்சம் ஸ்தாபிக்கப்படுவதற்கு காலம் சமீபமாயிற்றென்று தெரிவிக்கின்றன. ஆகையால், ராஜ்யங்கள் கோபங்கொண்டிருக்கிற இப்பொழுதுள்ள மகா உபத்திரவ காலத்தின் மத்தியில், பூமியின் துரைத்தனங்கள் "இப்பிரபஞ்சத்தின் தேவனான" (2 கொரி 4:4) சாத்தானின் ராஜ்யத்திலிருந்து "நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய" ராஜ்யத்திற்கு மாற்றப்பட இருக்கின்றன என்றும், "அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்" (வெளி 11: 15-18) என்றும் வேதாகமும், காலங்களின் அடையாளங்களும் காண்பிக்கின்றன என்று, நமக்குச் சமீபமாயிருக்கிறவர்களிடமும் தூரமாயிருப்பவர்களிடமும், நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், சந்தோஷமான இயேசுவின் ராஜ்யத்தின் செய்தியை, அந்த உண்மையான நற்செய்தியை அறிவிப்பதில் நாமும் நிச்சயமாகச் சேரலாம்.

*'The Kingdom of Heaven is at Land' - BS 578*